**சுருக்கம்**

நெடுஞ்சாலைத் துறை – பெருநகர அலகு – சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் 2005–06 – இரு பணிகளுக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்தல் – ஆணையிடப்படுகிறது.

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு.1) துறை

அரசாணை (டி) எண்.235 நாள் : 09–12–2010,
கார்த்திகை – 23, திருவள்ளுவராண்டு 2041

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண். 229, நெடுஞ்சாலைத் (எச்.டபிள்யு.1) துறை, நாள் 14–11–2005.
2. அரசாணை (நிலை) எண். 24, நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.என். 1) துறை, நாள் 13–02–2009.
3. அரசாணை (நிலை) எண். 289, நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.என். 1) துறை, நாள் 04–12–2008.
4. தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம், கடித எண். தி.நி.ஒ/2009/உ.பொ1, நாள் 20–10–2010.

********

**ஆணை :–**

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2005–2006 ஆம் ஆண்டிற்கான போக்குவரவு மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சென்னை மாவட்டத்தில் கீழ்க்கண்ட அரசாணைகளின் மூலம் இன்ன பிற பணிகளுள் கீழ்க்காணும் 2 சாலைபணிகளுக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது.

| வ. எண் | வேலையின் பெயர் | அரசாணை எண், நாள் | நிர்வாக ஒப்புதல் தொகை | தொழில் நுட்ப ஒப்புதல் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | எண்ணூர் விரைவு சாலையில் எண்ணூர் முகத்துவாரத்தின் மீது உயர்மட்ட பாலம் அமைத்தல். | அரசாணை (நிலை) எண். 229, நெடுஞ்சாலைத் (எச்.டபிள்யு.1) துறை, நாள். 14–11–2005. | 2000.00 | 5266.00 |
| 2. | அண்ணாநகர் 2வது நிழற்சாலை மற்றும் திருமங்கலம் முகப்பேர் சாலை உள்வட்ட சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைத்தல் | அரசாணை (நிலை) எண். 229, நெடுஞ்சாலைத் (எச்.டபிள்யு.1) துறை, நாள். 14–11–2005. | 3000.00 | 6023.00 |
| | | மொத்தம் | 5000.00 | 11289.00 |

2. இப்பணிகளுக்கு திட்ட ஒப்புதல் பெற்ற பின்னர் பணிகளின் செயலாக்கத்திற்காக விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள எண்ணூர் பாலப் பணி அமையவிருக்கும் இடத்தில் இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையம், இவ்விடத்தை நீர்வழிப் பாதையாக அறிவித்து அதில் கட்டுமானம் ஏதும் ஏற்படுத்தப்பட்டால் கடைபிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளை தெரிவித்து அதனை உள்ளடக்கி, மேம்பாலத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய வடிவமைப்பு அமைப்பது குறித்த இறுதி முடிவு எட்டப்படுவதில் ஏற்பட்ட காலதாமதத்தினால், பாலத்தின் மதிப்பீட்டினை இறுதி செய்வது தள்ளிக் கொண்டே சென்றது. தற்பொழுது இப்பாலம் அமைய உள்ள இடத்திற்கு இந்திய உள்நாட்டு நீர்வழிப்பாதை ஆணையம் நிர்ணயித்திருந்த கட்டுப்பாடுகளை ஏற்று, விரிவான மதிப்பீடு நடைமுறை விலைப்புள்ளியின்படி (2010–11 ம் ஆண்டு) தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட விலை விகித உயர்வுகளால் திட்ட மதிப்பு உயர்ந்துள்ளது. எனவே, ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள திட்ட மதிப்பு உயர்ந்துள்ள நிலையில் இப்பணிக்கான திருத்திய நிர்வாக ஒப்புதல் பெறப்பட வேண்டி உள்ளது. மேலும் இப்பணிக்காக 16–09–2010 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, ஒப்பந்தம் 04–10–2010 அன்று நடைபெற்ற Commissionerate of Tender கூட்டத்தில் மதிப்பீட்டை விட 9.99 விழுக்காடு கூடுதலாக ஏற்கப்பட்டுள்ளது, எனவே ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ள தொகையினையும் உள்ளடக்கி திருத்திய திட்ட மதிப்பீடு இறுதி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டை விட திருத்திய திட்ட மதிப்பீடு கூடுதலாக உள்ளதால் திருத்திய நிர்வாக ஒப்புதல் தேவைப்படுகிறது.

3. அதே போன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள திருமங்கலம் – முகப்பேர் சாலை மேம்பாலம் அமைக்கும் திட்டப்பணியும் மதிப்பீடுகள் தயாரிக்கும் நிலையில், இதே பகுதிக்கு திட்டமிடப்பட்டிருந்த மெட்ரோ இரயில் பாதையின் நேர்பாடு அமைந்திருந்ததால், அந்நிறுவனத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே சாலை மேம்பாலத்தின் வடிவமைப்பு இறுதி செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்பொழுது மேற்படி பிற திட்ட செயல்பாட்டு நிறுவனங்களின் ஆலோசனைகளுக்குப் பிறகு புதிய விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இது மதிப்பீட்டு தொகையை விட அதிகப்படியாக உயர்ந்துள்ளதால், இப்பணிக்கும் திருத்திய நிர்வாக ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. இப்பணிக்கும் ஒப்பந்த மதிப்பீட்டை விட 9.99 விழுக்காடு அதிகமாக ஏற்கப்பட்டுள்ளது. அதனையும் உள்ளடக்கிய திருத்திய நிர்வாக ஒப்புதல் தேவை எழுந்துள்ளது. எனவே மேற்கண்ட இரு பணிகளுக்கும் திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) தமது செயற்குறிப்பில் அரசைக் கேட்டுக் கொண்டார்.

4. மேலே பார்வை 3 –ல் படிக்கப்பட்ட அரசாணையில் திருத்திய நிர்வாக ஒப்புதல் பிரேரணைகளை பரிசீலிப்பதற்காக நிதித்துறையின் பிரதிநிதி, நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை பிரதிநிதி, தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை, தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு மற்றும் ஆய்வு) நெடுஞ்சாலைத் துறை மற்றும் தொடர்புடைய நெடுஞ்சாலைத் துறை அலகின் தலைமைப் பொறியாளர்களைக் கொண்ட குழுவானது அமைக்கப்பட்டுள்ளது. மேலே பத்தி–1 ல் கண்ட பணிகளுக்கு திட்ட மதிப்பீட்டு, விலை விகித மாறுபாடு காரணமாக உயர்ந்துவிட்டதால் இப்பணிகளுக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் கோரும் தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் செயற்குறிப்புகளை 11–10–2010 அன்று பரிசீலித்த திருத்திய நிர்வாக ஒப்புதல் குழுவானது அவைகளை ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | அரசாணை எண், நாள் | நிர்வாக ஒப்புதல் தொகை | திருத்திய நிர்வாக ஒப்புதல் குழுவால் பரிந்துரைக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | எண்ணூர் விரைவு சாலையில் எண்ணூர் முகத்துவாரத்தின் மீது உயர்மட்ட பாலம் அமைத்தல். | அரசாணை (நிலை) எண். 229, நெடுஞ்சாலைத் (எச்.டபிள்யு.1) துறை, நாள். 14–11–2005. | 2000.00 | 5266.00 |
| 2. | அண்ணாநகர் 2வது நிழற்சாலை மற்றும் திருமங்கலம் முகப்பேர் சாலை உள்வட்ட சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைத்தல் | அரசாணை (நிலை) எண். 229, நெடுஞ்சாலைத் (எச்.டபிள்யு.1) துறை, நாள். 14–11–2005. | 3000.00 | 6023.00 |
| | | மொத்தம் | 5000.00 | 11289.00 |

5. தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) அவர்களின் செயற்குறிப்புக்களானது, திருத்திய நிர்வாக ஒப்புதல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு அதன்படி மேலே பத்தி 4–ல் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு அட்டவணையில் கட்டம் 5ல் (Column 5) குறிப்பிடப்பட்ட தொகைகளுக்கு, திருத்திய நிர்வாக ஒப்புதல் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டவாறு, திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. இப்பணிகளுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"5054 – சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 03 – மாநில நெடுஞ்சாலைகள் – 101 – பாலங்கள் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II – மாநிலத் திட்டம் – JD – போக்குவரத்து மேலாண்மைக்காக, சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் சாலை மேம்பாலங்கள் கட்டுதல் – 16 பெரும்பணிகள்".
(து.தொ.கு. 5054–03–101–JD-1601)

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான நிதியொதுக்கம் 2010–11 ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், திட்டங்கள், நெடுஞ்சாலைத் துறை, சென்னை அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது. மேலும் 2010–11 ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதி (பொ.ப.I)த் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2010–2011 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீட்டில் சேர்த்திடும் பொருட்டு தேவையான விளக்கக் குறிப்பினையும் நிதி (வரவு – செலவு பொது – I) துறைக்கு அனுப்புமாறும் தலைமைப் பொறியாளர், திட்டங்கள், நெடுஞ்சாலைத் துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வரசாணையானது நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண்.65728/பொ.ப.1/10 நாள் 07–12–2010 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1485 (ஆயிரத்து நானூற்று எண்பத்து ஐந்து) –ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–16
தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–15
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.

நகல்:–
நிதி (பொ.ப.I / வ.செ.பொது I / வ.செ.பொது II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி)அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள்)
அவர்களின், நேர்முக உதவியாளர், சென்னை–9.
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர்
அவர்களின் தனிச்செயலர், சென்னை–9.
அனைத்து திட்டப்பிரிவுகள் நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை,
சென்னை–9.
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.